முதல் குவாலிபிகேஷனே இந்த பிரிவிலேஜ் மோஷனுக்கு இல்லே, அது உரிய நேரத்தில் கொடுக்கப்படவில்லை. காலந்தாழ்த்திக் கொடுத்ததற்குக் காரணம் அந்த நேரத்தில் சட்டப் பேரவைக்கு வரவில்லை என்று சொல்கிறார்கள். சட்ட சபைக்கு நீங்கள் வரவில்லை, ஆகவே கொடுக்கவில்லை என்று சொல்வது முறை யாகாது. சட்டசபை கூடியிருக்கிறது. இங்கே பேசுகிற உறுப்பினர்கள் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் பேச்சைக் கேட்டு இருக்கிறார்கள் என்று தான் கொள்ள வேண்டும். முதல் விதி நிறைவேறவில்லை என்ற காரணத்தால்தான் அதைத் தள்ளுபடி செய்து இருக்கிறேன். மேற்கொண்டு அதை விவாதிப்பதற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

மாணவ மாணவியர் சேர்ந்து பயிலும் கல்விமுறை முடிவுறும் வகையில் பிறப்பிக்கப்பட்ட ஆணை நடைமுறைப்படுத்தப் பட்டதும், ஆசிரியர் வேலே இழப்பும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் ஒரு அவசரப் பொதுமுக்கியத்வம் வாய்ந்த பிரச்னையை மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

THIRU K. SUPPU : Sir, Under Rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, viz. :—

" The grave situation arising out of the proceedings of Director of School Education in Roc. No. 217631/E-2/71, dated 29th January 1973 giving effect to the order issued in G.O. Ms. No. 1664, Education, dated 19th October 1972 putting an end to co-education in secondary schools and thereby throwing thousands of teachers out of employment. "

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 8-வது வகுப்புவரை உள்ள எல்லா துவக்கப்பள்ளிகளும், மாணவரும், மாணவியரும் சேர்ந்து பயிலும் பள்ளிகளாக செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கல்வி விதி 33-ன் படி, மாணவியருக்கென்று தனியே பெண்கள் உயர்நிலைப்பள்ளி